**செய்தி வெளியீடு எண்: 821** **நாள்: 22.11.2019**

## செய்தி வெளியீடு

கவிஞர் சுரதா அவர்களின் 99ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, அசோக் பில்லர், மாநகராட்சி பூங்கா அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(23.11.2019) காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், கவிஞர் சுரதா அவர்களின் பிறந்த தினமான நவம்பர் 23ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

கவிஞர் சுரதா அவர்கள் தஞ்சை மாவட்டம் பழையனூரில், திருவேங்கடம்–செண்பகம் தம்பதியருக்கு மகனாக 1921ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் தேதி பிறந்தார். இவரது இயற்பெயர் இராசகோபாலன் ஆகும். கவிஞர் பாரதிதாசனிடம் கொண்ட பற்றுதலால், பாரதிதாசனின் இயற்பெயராகிய சுப்புரத்தினம் என்பதின் அடிப்படையில் தன் பெயரை சுப்புரத்தினதாசன் என்று மாற்றிக்கொண்டார். தன் மாற்றுப்பெயரின் சுருக்கமாக ‘‘சுரதா’’ என்னும் பெயரில் பல மரபுக்கவிதைத் தொகுப்புகள் தந்தவர். செய்யுள் மரபு மாறாமல் எழுதிவந்த கவிஞர் சுரதா அவர்கள், உவமைகள் தருவதில் தனிப்புகழ் ஈட்டியவர். இதனால் இவரை உவமைக் கவிஞர் என்று சிறப்பித்துக் கூறுவர்.

உலகத் தமிழ்க் கவிஞர் பேரவையைத் தொடங்கிய சுரதா அவர்கள், அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். எதிலும் புதுமை, புரட்சி செய்வதில் நாட்டம் கொண்ட சுரதா அவர்கள், வீட்டுக்கு வீடு கவியரங்கம், படகுக் கவியரங்கம், ஆற்றுக் கவியரங்கம், விமானக் கவியரங்கம், கப்பல் கவியரங்கம் என பல்வேறு கவியரங்க நிகழ்ச்சிகளை நடத்தி, இளங்கவிஞர்களை ஊக்குவித்துள்ளார்.

சுரதா அவர்கள், ‘‘உவமைக் கவிஞர்’’ என்ற புகழ் பெற்றவுடன், ‘‘காவியம்’’ என்ற பெயரில் கவிதை வார இதழ் ஒன்றைத் தொடங்கினார். முதன் முதலில் கவிதையிலேயே வார இதழ் நடத்தியவர் என்ற பெருமையையும் பெற்றார். பிறகு, ‘‘இலக்கியம், ஊர்வலம், விண்மீன்’’ என பல இலக்கிய ஏடுகளை நடத்தினார். ‘‘நுண்புலக் கவிதை வகை’’ என்ற அடையாளங்களோடு தமிழ்க் கவிதையை வளர்த்தெடுத்த பெருமை சுரதா அவர்களுக்கு உண்டு. இவர் வழக்கமாக பொருத்திப் பார்க்கும் உவமைகளை தள்ளிவிட்டு, எங்கோ வெகுதொலைவில் உள்ளவற்றைக் கொண்டுவந்து உவமைகளாக்கி கவிதைகளில் ஒரு புது மாற்றத்தைக் கொண்டுவந்தார்.

கவிஞர் சுரதா அவர்கள் கவிதையாக்க நெறிமுறைகளில் வேறுபட்ட உத்திகள், வெளிப்பாட்டு பாங்குகள் எனத் தனித்துவம் உள்ளவராக தன்னை வளர்த்து, தனக்கென ஓர் ஆளுமையை உருவாக்கிக்கொண்டார். திரைப்படக் கதை வசன ஆசிரியர், பாடல் ஆசிரியர், கவிதை இதழ் ஆசிரியர், கவியரங்கத் தலைவர் என பன்முகச் செயல்பாடுகள் கொண்ட கவிஞர் சுரதா அவர்கள் தனது 84ஆம் வயதில் 19 ஜூன் 2006 அன்று சென்னையில் இயற்கை எய்தினார்.

கவிஞர் சுரதா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, அசோக் பில்லர், மாநகராட்சி பூங்கா அருகில் அமைந்துள்ள கவிஞர் சுரதா அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(23.11.2019) காலை 10.00 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**